OS.No. 43/2024

Dated: 26.11.2025

Witness Name Loganathan – PW2

**சாட்சி அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

1. வழக்கின் வாதி செல்வராஜ் எனக்கு எவ்வாறு பழக்கம் என்றால் எனது சைட்டின் பக்கத்து வீட்டுக்காரர் ஆவார். மேற்படி வாதியின் வீட்டிற்கு பக்கத்தில் எனது சைட்டு உள்ளதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வாதியின் கதவு எண் தெரியுமா என்றால் 92 ஏ, குமரன் வீதி ஆகும். வாதியின் தந்தை பெயர் தெரியுமா என்றால் கருப்புசாமி ஆகும். வாதி என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் அது தெரியாது. அவர் நிதி நிறுவனம் மற்றும் சீட்டு நிறுவனம் நடத்தி வருகிறார் என்றால் அது பற்றி தெரியாது. எத்தனை மணிக்கு அவரது வீட்டிற்கு சென்றேன் என்றால் காலை 11 மணிக்கு சென்றேன். பிரதிவாதியை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். பிரதிவாதி வடமாநிலத்தவர் என்பதால் அவருக்கு தமிழ் தெரியுமா என்றால் நன்றாகதெரியும், தமிழ் படிப்பார் ஆனால் எழுதுவாரா என்று தெரியாது. பிரதிவாதி எழுதிக்கொடுத்ததாக சொல்லப்படும் கடனுறுதிச் சீட்டை பார்த்துள்ளேனா என்றால் அப்போது பார்த்தேன்.

2. எதற்காக கடனுறுதிச் சீட்டில் ஸ்டாம்ப் மீது இரண்டு கையொப்பம் பெறப்பட்டது என்றால் ஏதோ சட்ட விதி என்று சொன்னார்கள். அது போக மேற்படி ரேகையும் பெறப்பட்டது என்றால் சரிதான். எவ்வளவு விலை முத்திரை இடப்பட்டது என்றால் 1 ரூபாய் முத்திரை வில்லை ஒட்டப்பட்டது. அவ்வாறு பிரதிவாதியிடம் கையொப்பம் மற்றும் கைரேகையும் பெற வேண்டிய தேவை என்ன என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி கடனுறுதிச் சீட்டு எழுதப்பட்டது எனது கையொப்பமும் ஒரே பேனாவால் என்றால் நான் எனது கையொப்பத்தை எனது பேனாவில் செய்தேன். பிரதிவாதி அதே பேனாவில் கையொப்பம் செய்தார் என்றால் நான் கையொப்பம் செய்த பேனாவில் அவர்போடவில்லை வேறு பேனாவில் போட்டார். வாதிக்கு பிரதிவாதிக்கு என்ன தொடர்பு என்றால் தெரியாது. வாதியின் சீட்டு குழுவில் நான் உறுப்பினர் என்றால் இல்லை.

3. கடனுறுதிச் சீட்டு எழுதியதாகசொல்லப்படும் ராஜேஷ்குமார் சாட்சியாக மட்டுமே கையொப்பம் செய்துள்ளார், மேற்படி ஆவணத்தை எழுதவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி கடனுறுதிச் சீட்டில் கையொப்பம் செய்ததை நான் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. வாதி பிரதிவாதிக்கு பணம் ரூ. 1,50,000 கொடுத்ததை நான் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் என்ன வியாபாரம் செய்து வருகிறேன் என்றால் மருந்து மொத்த கொள்முதல் விற்பனை செய்து வருகிறேன். மேற்படி பணம் ரூ. 20 ஆயிரத்திற்கு மேல் கை ரொக்கமான தர கூடாது என்று தெரியும் என்றால் எனக்கு தெரியாது. நான் வாதிக்கு பக்கத்து இடத்துக்காரர் என்பதால்அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/–)K.Yuvaraj,B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.